சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.22/2021

01.07.2025

வா.சா.1 திரு.ஜெயராமன், த/பெ. அருணாச்சலம்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதி வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பதிலறிவிப்பின் நகலை சேந்தமங்கலம் 412, அம்மாளு அம்மாள் நகரில் வசிக்கும் வி.டி. என்கிற தியாகராஜனுக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கொடுத்த அறிவிப்பில் கண்ட சங்கதிகளை முழுவதுமாக மறுக்காமல் மேலெழுந்தவாரியாக தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாவாவில் தாக்கல் செய்துள்ள காசோலை எண் 879097 ஆகும். திருவாரூர் சிண்டிகேட் வங்கியால் வழங்கப்பட்ட காசோலையாகும். அந்த காசோலையை தியாகராஜன் 21.02.2016 ல் சிண்டிகேட் வங்கியின் பேங்க் ரெக்கார்டு சிலிப்பில் நில விற்பனை குறித்த ஆதாரத்திற்காக கொடுக்கப்பட்ட காசோலையையும், 879098 என்ற சிண்டிகேட் வங்கியின மற்றொரு காசோலையையும் பிரதிவாதியிடமிருந்து வி.டி.என்கிற தியாகராஜன் பெற்று சென்றதாக வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலை எனக்கு கொடுக்கப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. 29.09.2020 ல் தொகை ரூ.5,00,000/- கடன் கொடுத்ததாக சொல்லப்படுவது எந்த வழியாக எனக்கு கிடைத்தது என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, ஆனால் பிளாட் விற்ற வகையில் நான் கையில் வைத்திருந்தேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா தொகையை எந்த நேரத்தில் யார் முன்னிலையில் கொடுத்தேன் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் வீட்டில் வந்து பணம் வாங்கி சென்றார். பிரதிவாதி காசோலையை யார் முன்னிலையில் என்னிடம் கொடுத்தார் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள தேதி எனது பெயர் ஆகியவற்றை யார் பூர்த்தி செய்தார்கள் என்று பிராதில் சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் கடன் கொடுத்த தொகையை வருமான வரியில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ரூ.5,00,000/- எந்த வகையில் கிடைத்து என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு எதிராக காசோலை சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் நான் முன் ஜாமீன் பெற்று பிணையில் வந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லும் கடன் சட்டப்படி தீர்க்க கூடியது இல்லை என்றாலும் சரியல்ல. காசோலை 2016 ல் வழங்கப்பட்டது என்பதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி வங்கி கணக்கு 2021 ஆம் வருடத்திற்கு முன்பே Stop Payment கொடுக்கப்பட்டு வங்கி கணக்கும் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி விவசாயி இல்லை என்பதற்கு எந்த ஆதாரமும் வழக்குரையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா காசோலையானது வி.தியாகராஜனிடமிருந்து பெற்று 30.12.2020 என தேதியையும் எனது பெயரையும் நான் பூர்த்தி செய்து மோசடியாக தொகையை பெற எண்ணி அறிவிப்பை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி உண்மையை தெரிவித்து பதிலறிவிப்பு கொடுத்த பின்னிட்டும் வி.தியாகராஜன் தூண்டுதலின் பேரில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என் மீதும் செல்வம் என்பவர் மீதும் புகார் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. தியாகராஜன் என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். தியாகராஜன் ஏ.ஒன் புரோமோட்டர்ஸ் நடத்திவருகிறார் என்றால் சரிதான். அவர் மீதும் பிரதிவாதி புகார் கொடுத்து முன் ஜாமின் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தியாராஜன் பேரில் குற்ற வழக்கை தாக்கல் செய்ததால் என் மூலமாக தியாகராஜன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.